### சென்னை, தரமணியில் உலக வங்கி சார்பில்

# நவீன உலகளாவிய வணிக மையம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 11–

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) சென்னை, தரமணியில் உலக வங்கியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன உலகளாவிய வணிக மையத்தை (Global Business Centre) திறந்து வைத்தார்.

கடந்த 2001ஆம் ஆண்டு 70 அலுவலர்களைக் கொண்ட ஒரு சிறிய குழுவுடன் நிறுவப்பட்ட சென்னை உலகளாவிய வணிக மையம் (Global Business Centre) விரிவாக்கப்பட்ட போது செப்டம்பர் 2006ல் தரமணியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது மார்ச் 2025ன்படி 1,500க்கும் மேற்பட்ட பணியாளர்களோடு, உலகளவில் 130க்கும் மேற்பட்ட உலக வங்கி அலுவலகங்களின் மூலம், 189 உறுப்பு நாடுகளுக்குச் சேவை செய்யும் ஒரு முக்கிய உலகளாவிய மையமாக வளர்ந்துள்ளது. அதன் திறமைமிக்க குழு, வலுவான உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டாளர் நட்பு நிர்வாகம் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டு, தீவிரமான உலகளாவிய தேடலுக்குப் பிறகு, சென்னை மையம் உலக வங்கிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**அதிநவீன வசதி!**

கடந்த 24 ஆண்டுகளில், தமிழ்நாட்டுப் பணியாளர்களின் முன்மாதிரியான அர்ப்பணிப்பு மற்றும் மீள்தன்மை மூலம், சென்னை உலகளாவிய வணிக மையம் உலக வங்கிக் குழுமத்தின் பல நிறுவன செயல்பாடுகளை ஆதரிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. இந்த தரமணி மையம் புதிய ஒத்துழைப்பு மண்டலங்கள் மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் உள்கட்டமைப்புடன் கூடிய அதிநவீன வசதியை வழங்குகிறது.

உலக வங்கி குழுமத்தின் முக்கிய செயல்பாடுகளை ஆதரிப்பதில் சென்னை உலகளாவிய வணிக மையம் முக்கிய பங்கு வகிக்கிறது. LEED பிளாட்டினம் சான்றிதழ் மூலம் காலநிலை மீள் கட்டமைப்புக்கு ஆதரவளித்து, சூரிய மின்சக்தி மற்றும் மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட வசதிகளும் இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**அத்தியாவசிய நிறுவன சேவைகள்!**

நிதி, கணக்கியல், கொள்முதல், நிர்வாகம், அறிவு மேலாண்மை, கருவூலம், மனித வளங்கள், இடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு களங்களில் அத்தியாவசிய நிறுவன சேவைகளை இந்த மையம் தொடர்ந்து வழங்கும்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர்

அசன் மௌலானா, ஒன்றிய அரசின் கேபினட் செயலாளர் முனைவர் டி.வி. சோமநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் வென்காய் ஜாங், உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் அகஸ்டே டானோ கோமே, சென்னை மையத் தலைவர் சுனில் குமார், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர். பிரஜேந்திர நவ்நீத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உலக வங்கியின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




### விழுப்புரம் வடக்கு மாவட்டம் சார்பில்

# செஞ்சியில் 1000 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

விழுப்புரம், ஜூன் 11–

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மை இஸ்லாமிய 1000 மகளிருக்கு ரூ 5 லட்சம்மதிப்பீட்டிலானநலத்திட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள்விழாவை செம்மொழி நாளாக விழுப்புரம் வடக்கு மாவட்ட முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிறுபான்மை இஸ்லாமிய மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி பேரூராட்சி சத்திர தெருவில் உள்ள பெரிய மசூதி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத்மஜித் பாபு தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் ஆயிரம் இஸ்லாமிய மகளிருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார் .

அப்போது நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்.

கல்வி மூலம் சமுதாயத்தில் முன்னேற்றம் அடைவதற்கு பெண்கள் கல்வி பெறவேண்டும், பெண்ணுரிமை பாதுகாக்கப்பட வேண்டும், விதவைக்கு மறுவாழ்வு திட்டம் போன்ற என்ற உன்னத திட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார்.

அந்த வகையில் இன்று ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சிக்கிறது இதை முதன் முதலில் தடுத்து நிறுத்தியவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டா லின் அவர்கள்.

இதைத் தொடர்ந்து மகாராஷ்டிராவிலும் இந்தியை தடுத்து நிறுத்தி உள்ளனர்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக இந்திய முஸ்லிம் லீக் கட்சியின் விழுப்புரம் மாவட்ட கௌரவத் தலைவர் சையத் மஜித் பாபுபேசுகையில்

அ.தி.மு.க.பி.ஜே.பி.யுடன் கூட்டணி சேராது என்று சொல்லி பிஜேபியுடன் கூட்டு சேர்ந்து உள்ளனர். ஆனால் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது கொள்கையில் நிரந்தர மாக இருந்து மதவாத சக்தியுடன் கூட்டணி சேராமல் மதவாதத்தை தமிழகத்தில் நுழைய விட மாட்டோம் தமிழ்நாட்டில் அனைவரும் ஒற்றுமையுடன் இருப்போம் என்ற உணர்வுடன் திராவிட மாடல்ஆட்சி நடத்தி வரும் மு க ஸ்டாலின் அவர்களுக்கு இஸ்லாமியர்கள் உறுதியுடன் இருப்போம் என தெரிவித்த அவர் மேலும் இந்த ஆட்சி தொடர வேண்டும் என்றும் முதலமைச்சர் சொன்ன வகையில் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்ற எண்ணத்தை பூர்த்தி செய்யும் வகையில் இஸ்லாமியர்கள் அனைவரும் உறுதியாக இருப்போம் என்றும்மதவாத சக்திகள் செய்யும் சூழ்ச்சியை எதிர்கொள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் முதலமைச்சருடன் கைகோர்ப்போம் என அவர்உறுதிபட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நிர்வாகிகள் ஜான் பாஷா, நூர்ஜகான் ஜாபர், அஷ்ரப், முபாரக், சமியுல்லா, ஜே. எஸ். சர்தார், ஷாஜகான், தொண்டரணி பாஷா, ஷாஜி ஷரீப், ரோமியன், பிரபு, கோகுல், பிரபா, ஹாஜி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


